REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5 சென்னை: ஆடி 4௳ வெள்ளி (19—7—57) ★ வெளியூர்: ஆடி 5௳ சனி (20—7—57) | இதழ் 29

அன்னியகப்பல் கம்பெனிகட்கு ரூபாய் 58 கோடி!

டெல்லி சர்க்கார் தந்ததாம்

புதுடில்லி, ஆக 18—

போக்குவரத்துக் கட்டணமாக அன்னிய கப்பல் கம்பெனிகளுக்கு டெல்லி சர்க்கார் 1956—57-ம் ஆண்டில் ரூ. 58 கோடிவரை தந்ததாகக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

எங்களைக் காப்பாற்றுங்கள்! நீதி வழங்குங்கள்!

நேருவுக்குசென்னைசர்க்கார் ஊழியர்கள் தந்தி!

டில்லி சர்க்கார் பல துறை ஊழியர்கள் போர்க் குரல்

சென்னை, ஜூலை 18—

"தொடர்ச்சியான விலை ஏற்றம், சர்க்காரின் அலட்சியம், நீதி வழங்க மறுக்கும் போக்கு இவற்றால் எங்கள் கஷ்டங்கள் அளவு மீறி வளர்ந்துகொண்டே செல்கின்றன; 'நிதி வசதி இல்லை', என்று சர்க்கார் சாக்குச் சொல்லிக்கொண்டே யிருக்கிறது; எங்களைக் காப்பாற்றுங்கள்; உத்தேசிக்கப்படும் சம்பளக் கமிஷன் சிபாரிசுகள், மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் பொருந்தும்படியாக இருக்க வேண்டும்"

என்று சென்னை சர்க்கார் ஊழியர்கள், டெல்லி சர்க்காருக்குத் தந்தி அனுப்பி யிருக்கிறார்கள் என்று ஊழியர் சங்கம் அறிவிக்கிறது.

தந்தி, பண்டித நேரு, பண்டித பந்த், கிருஷ்ணமாச்சாரி, நந்தா ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

★

இரயில்வே ஊழியர் குமுறுகின்றனர்

போர்க்குரல் எழுப்ப மாநாடு

பம்பாய், ஜூலை 18—

தங்களின் கோரிக்கைகளை டெல்லி சர்க்கார் நிறைவேற்றா விட்டால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும், இந்த முடிவை எடுப்பதற்காக அகில இந்திய இரயில்வே ஊழியர் பெடரேஷன் மாநாடு வரும் ஆகஸ்டு 11—13-ந் தேதிகளில் பூனாவில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★

விமானப் போக்குவரத்து இலாகா ஊழியர்

வேலைநிறுத்த அறிக்கை தாக்கலாயிற்று

ஏற்கனவே முடிவு செய்தபடி விமானப் போக்குவரத்து இலாகா ஊழியர்கள் வரும் ஆகஸ்டு 8-ந் தேதி இரவு முதல் கால வரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக இலாகா தலைமை அதிகாரியிடம் 'நோட்டீஸ்' தாக்கல் செய்து விட்டனர் என்று தெரியவருகிறது.

வேலைநிறுத்த முடிவு ஊழியர் சங்கத்தவரால் கடந்த ஜூலை 17-ந் தேதியன்று எடுக்கப்பட்டது; வேலைநிறுத்தத்தை முன்னின்று நடத்த தோழர் மதுசூதனன் தலைமையில், ஒரு செயல் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

★

சாஸ்திரியாரின் உபதேசம்

வேலைநிறுத்த முடிவைக் கைவிட வேண்டுமாம்

தபால்—தந்தி இலாகா ஊழியர்களுக்கு மந்திரி லால்பகதூர் சாஸ்திரியார் உபதேசம் செய்திருக்கிறார்!

"நியாயமான வழிகளைத் தேடுங்கள்; வேலை நிறுத்த முடிவைக் கைவிடுங்கள்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்!

தபால்—தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது கொடிய விளைவுகளைக் கொண்டது என்றும், ஊழியர்களின் கோரிக்கைகளை சர்க்கார் முடிந்த வரை பரிசீலிக்கும் என்றும் சாஸ்திரியார் கூறியிருப்பதுடன், ஊழியர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் கவனிக்க ஒரு நிரந்தர கமிட்டி அமைக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

மீனவர்களுக்குக் கைவிரிப்பு!

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, ஜூலை 17—

மீனவர்களுக்குக் கட்டுமரம் வழங்குவதற்குக் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்குக் கிடையாதாம்!

மீனவர்களுக்குத் தேவையான கட்டுமரங்கள் கிடைப்பதில்லை என்ற நிலையும், அரசாங்கம் விற்பனை செய்யும் கட்டுமரங்களின் விலை அதிகம் என்ற நிலையும் முன்னர் இருந்ததாம்!

இப்போது சென்னை அரசாங்கம் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கட்டுமரங்கள் விற்பனைக்கு மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கேட்டிப்பதாக சட்டசபையில் அமைச்சர் லூர்து அம்மாள் தெரிவித்தார்கள்.

தோழர் ஏ. கோவிந்தசாமி:— "தஞ்சை, தூத்துக்குடி பகுதியில் மட்டுமே கட்டுமரங்கள் வழங்கப்பட்டது ஏன்?"

அமைச்சர்:— "அங்கு தான் சேரிகள் அதிகம்."

"சென்னை வாசிகளுக்கு மட்டுமே 'லைசென்சு'கள் தரப்படுகிறதே ஏன்?"

அமைச்சர்:— "எங்கு அவசியம் என்று கருதப்படுகிறதோ அங்கு அனுமதி தரப்படுகிறது."

கூரை மீதேறி கோழி பிடிக்காதவர் கோபுரமேறி கைலாயத்திற்குவழிகாட்டுவாராம்

'பெரிய மீன்' பிடிப்பாராம் நிதி அமைச்சர்!

சென்னை, ஜூலை 19—

சென்னை அரசாங்கம் அனாதைகளுக்கு மாதம் ரூ. 8-ம், தாழ்த்தப்பட்டவர்களுக்கு மாதம் ரூ 15-ம், விடுதியிலுள்ள பிச்சைக்காரர்களுக்கு மாதம் ரூ. 10-ம் உதவியாக அளிக்கிறதாம்.

சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது, கழக உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் இது பற்றி ஒரு கேள்வி எழுப்பினர்.

"அனாதைகளுக்கு உதவியளிக்க மத்திய அரசாங்கத்தை நமது அரசாங்கம் வற்புறுத்துமா?" என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டார்.

நிதி அமைச்சர்:—"நான் சிறு மீன் பிடிக்க விரும்புவதில்லை; பெரிய மீன் பிடிப்பதில்தான் அக்கறை செலுத்துகிறேன்."

தோழர் க. அன்பழகன்:—"மடாலயங்களைக் கட்டாயப்படுத்தி அனாதை விடுதிகளை நடத்த அரசாங்கம் வற்புறுத்துமா?"

அமைச்சர்:—"இப்போதே அது அமுலில் இருக்கிறது."

அனுபவமும் பயன்படவில்லை!

சென்னை, ஜூலை 19—

சுதர்சன் எண்ணெய் ஆலைக்கு சென்னை அரசாங்கம் ரூ. 10 இலட்சம் கடன் கொடுத்து, மீண்டும் அத்தொகையைத் திரும்பப் பெற முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது தெரிந்த ஒன்றாகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிமெண்டு ஆலை துவங்க 'சென்னை சிமெண்டு ஆலை', நிறுவனத்திற்கு ரூ. 10 இலட்சம் கடன் உதவியளிக்க அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக சட்டசபையில் அமைச்சர் தெரிவித்தார்.

தொழில் துறையில் இலாபம் நஷ்டம் என்பது சாதாரணமானதுதான் என்றும் அவர் தெரிவித்தார்.

க. அன்பழகன்:— "தொழில் துறையில் இலாப நஷ்டம் ஏற்படுவது சாதாரணமானதுதான் என்று அமைச்சர் தெரிவித்திருப்பதால் சில தொழிற்சாலைகளை அரசாங்கமே ஏற்று நடத்த முன்வந்தால் நஷ்டம் ஏற்படாமல் தடுத்து, மூலதனத்தையேனும் பாதுகாக்கலாம் அல்லவா?"

அமைச்சர்:— "தொழில் முன்னேற்றத்தை மனதில் கொண்டு உதவியளிப்பது தவறல்ல."

அரசினர் இணைப்புமருத்துவகல்லூரி

மு. கருணாநிதி கேள்விக்கு மந்திரியின் மழுப்பல்

சென்னை, ஜூலை 19—

கீழ்ப்பாக்கத்திலுள்ள அரசினர் இணைப்பு மருத்துவக் கல்லூரியில் (G. C. I. M.) அரசினர் சட்ட இலாகா 1956-ல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இணைப்பு மருத்துவ முறை என்பது உள்நாட்டு மருத்துவ முறையிலும் நவீன மருத்துவ முறையிலும் பழக்கம, பயிற்சி, சமமான படிப்பு (Conjoint Study) அளிக்கும் முறையாகும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு மாறாக, அந்தக் கல்லூரித் தலைவர் (Dean) இந்த ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் கல்லூரியானது, முக்கியமாக ஆயுர்வேத, சித்த, யூனானி வைத்திய முறையில் பயிற்சியும் நவீன வைத்திய முறையில் (A good working knowledge) நடைமுறைக்குத் தேவையான அளவு நோக்கும் பயிற்சியும் அளிக்கப்படும் என்று காணப்படுகிறது!

"இந்த முரண்பாட்டை விளக்கி அந்தக் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி நடத்தி வருவது அரசாங்கக் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறதா? அதற்கென அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்."

இவ்வாறு, மருத்துவம்—சுகாதார இலாகா மூலதனச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்துக்கு அமைச்சர் எம். ஏ. மாணிக்கவேலர் அளித்த பதிலுக்குப் பின்னர், தோழர் மு. கருணாநிதி அவர்கள் மேற்படி தகவலைச் சுட்டிக்காட்டி விளக்கம் கோரினார்.

அமைச்சர் பதிலளிக்கையில், ஜி. சி. ஐ. எம். பட்டதாரிகளை எம்.பி.பி.எஸ். தரத்திற்குச் சமமாகப் பதிவு செய்வதை இந்திய மருத்துவக் கவுன்சில் மறுக்கிறது என்றும், ஆனால் சென்னை சர்க்கார், இந்த மாநிலம் சம்பந்தப்பட்டவரையில் ஜி.சி.ஐ.எம். பட்டதாரிகளுக்குத் தங்களாலான வரையில் உதவுவதற்கு உறுதி கொண்டுள்ளதாகவும், அதற்கு ஒரு 'போர்டு' ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு, வழக்கமான மழுப்பல் பதிலையே தந்தார்.

விவசாய அபிவிருத்தி

ஜப்பானிலிருந்து இந்தியாவுக்குக் கடன் உதவி

இந்தியாவின் விவசாய அபிவிருத்திக்காக ஜப்பான், குறைந்த கால தவணையில் கடன் உதவி செய்யும் என்று ஜப்பான் நாட்டுத் தூதுவர் யோஷினுவா கூறியிருக்கிறார்.

நாசரை வீழ்த்த சதி?

நகீபை பதவியிலமர்த்த முயற்சி?

எகிப்தில், பன்னிரு இராணுவ அதிகாரிகள் முன்னாள் மந்திரிகள் கைது!

லண்டன், ஜூலை 16—

எகிப்திய குடியரசுத் தலைவர் நாசரையும் அவரது சர்க்காரையும் பதவியிலிருந்து தூக்கி எறிந்துவிட்டு, முன்னைய குடியரசுத் தலைவரும் பிரதமருமான நகீபை பதவியிலமர்த்த கடந்த மே திங்களில் சதி செய்ததாக சுமார் 12 இராணுவ அதிகாரிகள், முன்னாள் மந்திரிகள் ஆகியோரை எகிப்திய பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர் என்று இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

மேஜர் - ஜெனரல் முகம்மது நகீப் கடந்த 1954-ம் ஆண்டில் நாசர், மற்றும் அவரது சகாக்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, கெய்ரோவை அடுத்த மெர்க் எனும் இடத்தில் வீட்டிலேயே சிறைவைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே!

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் நகீபும், நாசரும் தலைமை தாங்கி இராணுவப் புரட்சி ஒன்றை நடத்தி, 1952-ம் ஆண்டில் பரூக் மன்னனைப் பதவியிலிருந்து தூக்கினார்கள் அல்லவா—அந்தச் சம்பவத்திற்கு முன்புவரை 'வாப்த்' கட்சி நடத்திய ஆட்சியில் வெளிவிவகார மந்திரியாக இருந்த முகம்மது சலா எல்தின் என்பவரும் ஒருவர்; அதுபோலவே, இந்த பல தலைமுறைகளாக எகிப்தில் ஆட்சி நடத்திய 'வாப்த்' கட்சியைச் சேர்ந்தவர்களும், பிரதமர் வெளிவிவகார மந்திரிகளாயிருந்தவர்களும், இப்போதைய எகிப்து இராணுவத்தில் அலெக்சாண்டிரியா பிரதேசத்திலிருந்தவர்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—7—57 வெள்ளி

முழுமனதுடன் செயலாற்றுமா?

தமிழ் நாட்டில், மக்களின் தாய் மொழி ஆட்சி மொழியாவதற்கும், கல்வித் துறையில் தமிழே போதனு மொழியாக இருக்க வேண்டும்என்றும் நாம் பல ஆண்டுகளாக் வலியுறுத்தியும், அதற்கான ஆதாரங்களை எடுத்துரைத்தும் வந்துள்ளோம்.

தாய் மொழியை மறந்து வடவரின் இந்தி மொழி மீது மோகம் கொண்டவர்களின் ஏசலையும் தூற்றலையும் அதுபோது நாம் தாங்கிக்கொண்டதுடன், டில்லி எசமானர்களின் கட்டளையின்கிழ் கண்மூடித்தனமாக அடக்குமுறைகளைக் கையாண்ட நேரத்திலும்கூட நாம், 'தமிழ் மொழி'யின் பாதுகாவலர்களாகப் பணியாற்றி வந்துள்ளோம் என்பதை நாடறியும்—நாட்டு மக்களும் அறிவர்.

இப்போது, தமிழ் நிர்வாக மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், போதனு மொழியாகவும் ஆக்கப்பட்டு வருவது கண்டு மற்றவர்களைவிட நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

தமிழில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இப்போது இருப்பதற்கு இடமில்லாத அளவிற்கு தமிழ் மொழியின் தனிச் சிறப்பை நாம் நாடறியச் செய்துள்ளோம். மன்னர் ஆட்சி காலம் முதல், இந்த மக்கள் ஆட்சி காலம் வரையிலும், எத்துறையிலும் தமிழ் ஏற்றதாக விளங்கும் என்பதில் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை; அந்த அளவிற்கு, முதல்—இடை—கடை சங்கங்கள் மூலமும், தொடர்ந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாதுகாவலர்களின் அரிய பணியின் காரணமாகவும் தமிழ் வளர்ந்து கொண்டே வந்துள்ளது.

கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இப்போது ஆங்கிலத்தில் பாடம் கற்றுத் தருவதை மாற்றி, தமிழில் கற்றுத்தர வேண்டியது மிக்க அவசியம் என்பதை எவரும் உணர்வர்.

உயர்நிலைப்பள்ளி படிப்பு காலத்தில் தமிழ் மொழியில் பாடங்களை கற்ற மாணவன், கல்லூரிகளில் திடீரென ஆங்கிலத்தில் கற்கவேண்டும் என்ற அவல நிலையை நீடிக்கச் செய்வது நாட்டுக்கும் நல்லதல்ல—எதிர்கால சமுதாயத்திற்கும் உகந்ததாகாது என்பதே நம் கருததாகும்.

இந்த அவசியமான மாறுதலைச் செய்வதில் அரசாங்கம் தயங்குவதோ, தாமதப்படுவதோ, மாணவர் சமுதாயத்தை திண்டாடச் செய்வதுடன், கல்வியின் தரமும் நிச்சயமாகக் குறைந்து விடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே, உடனடியாக, கல்லூரிகளில்கூட தமிழ் மொழியில் மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

எளிய முறையில், தங்கள் தாய் மொழியில் மாணவர்கள் பாடங்களை நன்ருகப் புரிந்து கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

கணிதம், விஞ்ஞானம் போன்றவை தவிர மற்றவைகளை நிச்சயமாக தூய—எளிய தமிழில் கற்றுத்தர முடியும் என்பதை எவரும் அறிவர். ஆனுல் நடைமுறையில் ஏற்படக்கூடியவைகளை மதிப்பிட்டுப் பார்ப்பதில் பயன் இல்லை. தமிழிலேயே பாடங்கள் கற்றுத்தர கல்லூரி ஆசிரியர்களுக்கு வேண்டிய முன்னேற்பாடுகளையும் மற்ற வசதிகளையும் அளித்தால், இடைக்காலத்தில் ஒருவாறு நிலைமையைச் சமாளிக்க இயலும்.

இத்துறையில், தமிழ் மொழியில் ஆற்றலும், அறிவும் பெற்றவர்களைக்கொண்டு - திறமையும் தகுதியும் வாய்ந்த பைந்தமிழ் காவலர்களைக் கலந்துகொண்டு ஆவன செய்தால், நிச்சயம் தமிழை கல்லூரிக்கு ஏற்ற போதனு மொழியாகத் திகழச் செய்ய முடியும்!

நிலைமை எப்படி இருப்பினும் உயர்நிலைப் பள்ளிகளில் மீண்டும் ஆங்கிலத்தில் போதனு முறையைக் கொண்டுவர வேண்டும் என்று எவரும் கருதமாட்டார்கள். இந்த நிலையில், உயர்நிலைப் பள்ளிகளில் செய்யப்பட்டுள்ள சீர்திருத்தங்களை, ஏற்றமுறையில் கல்லூரிகளிலும் செய்ய வேண்டும் என்பதே, உள்ள பிரச்சினையாகும்.

இந்த மாற்றம் அவசியம் என்பதால், இதைச் செய்யத் தயங்குவதில் காலம் வீணுவதுடன் மாணவர் பாதிக்கப்படுவதும் நேரடி பலன்களாக விளங்குகின்றன.

இந்த மாற்றத்தை உடனடியாகச் செய்வதால் பல தவறுகள், சங்கடங்கள் ஏற்படக் கூடும்; ஆனுல், எந்த ஒரு நல்ல மாற்றமும், இப்படி இடைக் காலத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த நன்மையைப் பெரும் அளவிற்கு தருவதில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

எதிர்கால சமுதாயத்தை நினைத்தும், நமது சந்ததியினரின் நலனைக் கருதியும், நாட்டின் சிறப்பை எண்ணியும், தாய 'தமிழ்' மொழியின் ஈடு இணையற்ற சிறப்பை மதிப்பிட்டும், இப் பிரச்சினையில் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். எப்போதோ பெற்றிருக்க வேண்டிய சிறப்பை, இப்பொழுதேனும் தமிழுக்கு அளிக்க ஆட்சியினர் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

குழந்தை நன்ருக நடக்க வேண்டும் என்று விரும்பும் போது, அந்தக் குழந்தை கீழே விழுந்துவிடுமோ — என்ன நேரிடுமோ என்று அஞ்சி, எப்போதும் இடுப்பிலும், கையிலும் வைத்திருப்பது அறிவுடைமையாகாது!

எனவே, ஒரு சிலருக்கு இந்த மாற்றத்தின் காரணமாக இப்போது இடையூறுகள் இருப்பதாலும், எப்போதும் எல்லோருக்கும் பெருமைப் படத்தக்க நிலையை மனதில் கொண்டு, அரசாங்கம் இதற்கான் முயற்சியில் தயங்காமல், முழுமனதுடன் செயலாற்றுமென்று நம்புகிறோம்.

'வருமானத்தில் பெரும் பகுதி வடக்கு மாநிலங்களில் செலவழிக்கப்பட்டு இருக்கிறது'

'பொருள்களின் விலையேற்றத்திற்கு மூல காரணம் இதுவேயாகும்'

'மாநில வாரியாக புள்ளிவிவரங்கள் திரட்டப்படாததால் தென்னகம் அனுபவிக்கும் கொடுமை'

அமெரிக்க நடைமுறையைச் சுட்டிக் காட்டி பொருளாதார நிபுணர் பி. ஜே. தாமஸ் விளக்குகிருர்

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழும், இராணுவச் செலவின் கீழும், இந்தியப் பேரரசின் வருமானத்தில் பெரும் பகுதி சில வடநாட்டு மாநிலங்களில் செலவிடப்பட்டிருக்கிறது. இதுவே, பொருள் விலை ஏற்றத்திற்கான மூலகாரணமாகும்.

'வடக்கு மாநிலங்களில் அதிகமாகப் பணம் குவிந்திருக்கின்றது. அதன் பலனுக, உணவு தானியங்களுக்கும், இன்றியமையாப் பயன்படு பொருட்களுக்கும் அங்கு மிகுதியான தேவைஇருக்கிறது. அம்மிகுதித் தேவை ;மேற்படி பொருட்களின் விலையை உயர்த்தி விட்டது. அவ்விலையேற்றம் வடநாட்டுடன் நின்றுவிடவில்லை; அனைத்து இந்தியாவிலும் அவ்விலை ஏற்றம் பரவிக் கிடக்கிறது"

என்று பிரபல பொருளாதார நிபுணரான டாக்டர் பி. ஜே தாமஸ் அவர்கள், பொதுவிவகாரக் குழுவின் ஆதரவில் நடைபெற்ற கூட்டமொன்றில், 'தென்னுட்டின் பொருளாதார நலனும்—மண்டலக் குழுவும்' என்ற பொருள்பற்றி ஆற்றிய பேருரையில் குறிப்பிட்டிருக்கிருர்; அவரது உரையின் முற்பகுதி நேற்றைக்கு முன்தின இதழில் வெளியிடப்பட்டது; மற்ருெரு பகுதி இங்கே தரப்படுகிறது :—

"இப்பொருள் விலையேற்றத்தின் தீமைகளை, தெற்கு மாநிலங்களில் வாழ்ந்துவரும் மக்கள் அனுபவித்து வருகின்றனர். இப்பகுதி மக்களின் வருமானம் குறிப்பிடத் தகுந்த வகையில் உயராததே அதற்குரிய சிறப்பான காரணமாகும்.

"இத்துறையில் மிகுதியான அல்லலுக்கு ஆளாகி இருப்பது கேரளமேயாகும். ஏனெனில், அங்கு பண வருமானம் வீழ்ச்சியடைந்து வருவதின் பலனே அது. அவ்வீழ்ச்சிக்கும், வருமானமளிக்கக்கூடிய பல பணப் பயிர்களின் விலை 1951-லிருந்து பெரும் அளவில் சரியத் தொடங்கிவிட்டதே காரணமாகும்.

"இவ்வுண்மைகள் பரவலாக உணரப்படவில்லை. ஏனெனில், அவைகளின் வருமானம், உற்பத்தி முதலிய புள்ளிவிவரங்கள், அனைத்திந்தியாவிற்குமாக மொத்தத்தில் கணக்கிடப் படுவதே காரணமாகும். மாநில வாரியாக வருமானம்—உற்பத்தி முதலிய புள்ளிவிவரங்கள் திரட்டுவது அவசியமானது என அறியப்படவில்லை.

"அமெரிக்க கூட்டாட்சியில் 48 மாநில ஆட்சி அமைப்புகள் இடம் பெற்று இருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மையான மாநிலங்கள் தனித்தனியாக இந்தியாவில் உள்ள ஒரு மாவட்டத்தின் மக்கள் தொகையளவுகூட மக்களைக் கொண்டதாக இல்லை. ஆனுல், ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியாக தனது வருமானம்—உற்பத்தி பற்றிய புள்ளிவிவரங்களைக் கணக்கிட்டுக்கொள்ளுகின்றன. அமெரிக்கக் குடியரசு, தனது வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவதற்கு, மேற்படி மாநில புள்ளிவிவரங்களை பயன்படுத்துகிறது.

"அங்கு இப்பொழுது, ஒவ்வொரு மாவட்ட வருமானம் குறித்தும் புள்ளிவிவரங்கள் வெளியிடப்படுகின்றன. ஆனுல் இந்தியாவில் உள்ள நாமோ, அனைத்திந்திய புள்ளிவிவரத்தையும், நிகர வருமானத்தையும் கொண்டு இன்றும் திருப்தி அடைகிறவர்களாக இருக்கின்ருேம். அதிலும் அமெரிக்காவிலும் ஐரோப்பா முழுவதிலும் உள்ள வேற்றுமைகளைவிட மிகுதியாகக் கொண்டுள்ள துணைக்கண்டமான இந்தியாவில் இருக்கும் நாம், அனைத்திந்திய புள்ளி விவரங்களைக் கொண்டு திருப்தி அடைகின்றவர்களாக இருக்கிருேம்.

"மாநிலவாரியாக புள்ளி விவரம் திரட்டும் பொறுப்பு திட்டக் குழுவையும், இந்தியப் பேரரசையும் சார்ந்தது என்பதில் ஐயமில்லை. ஆனுல், விவகாரம் ஒழுங்காகவும் தீவிரமாகவும் நடைபெற்ற வேண்டுமானுல், மத்திய நிதியை சமநிலையில் பெறுவதை உயிராகக் கொண்டுள்ள மண்டலக் குழுவிடமிருந்தே தூண்டுதல் கிளம்ப வேண்டும்.

அனைத்திந்திய மட்டத்தில் புள்ளி விவரம் திரட்டிவரும் நிலையை உடைத்துக்கொண்டு, மண்டல மட்டத்திலும், மாநில மட்டத்திலும், குறிப்பாக உற்பத்தி வருமானம் பற்றிய புள்ளி விவரம் திரட்டும் முயற்சியை முதற்படியாக மேற்கொள்ள வேண்டும். அதன் பிறகு, இராணுவம் போன்ற பாதுகாப்புத் துறைக்குக் கேடு ஏற்படாத வகையில், மத்திய அரசாங்கத்தின் முதலீட்டை, பரவலாக வினியோகிப்பதற்கான சிறந்த முறைகளை வகுகக முடியும்.

"புள்ளிவிவரம் திரட்டுவதில் புது முறையைக் கையாள வேண்டும் என்ற தேவை உணரப்பட்டுவிட்டது என்பதை, நிதி (சென்னை) அமைச்சரின் வரவு-செலவுத் திட்டப் பேச்சு உணர்த்துகிறது.

"கேரளத்திலும் சென்னையிலும் தனி நபர் வருமானம் குறித்துத் தாம் குறிப்பிட்ட எண்களை நிதி அமைச்சர் எங்கிருந்து பெற்ருர் என்பது தெரியவில்லை. அவர் குறிப்பிட்ட எண் விவரம் ஐயத்திற்குரிய புள்ளி விவரத்திலிருந்தே குறிப்பிடப்பட்டிருக்கிறதோ என அஞ்ச வேண்டியிருக்கிறது. எப்படி இருந்தாலும் நிதியமைச்சரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கேரளத் தனி நபர் வருமானம் உயர்ந்த நிலையில் இருக்கிறது. கேரள சர்க்காரால் அண்மையில் திரட்டப்பட்ட புள்ளி விவரத்திலிருந்து அவர் அவ்வாறு குறிப்பிட்டிருக்கக்கூடும்."

அமைச்சர்கள் ஊர் சுற்றிய செலவு!

சென்னை மாநில அமைச்சர்கள் 1956-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் 1957-ம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதி வரையுள்ள ஐந்து திங்கள்களுக்கும், அவர்கள் பெற்றுள்ள சுற்றுப்பயண படி விவரம் :—

காமராசர்	ரூ. 1,072—3—0
சி. சுப்பிரமணியம்	ரூ. 1,806-2-0
எம். பக்தவத்சலம்	ரூ. 1,502-2-0
எம். ஏ. மாணிக்கவேலர்	ரூ 2,126-9-0
எஸ். எஸ். இராமசாமி படையாச்சி	ரூ. 947-8-0
பி. பரமேசுவரன்	ரூ. 674-8-0
இராஜேஸ்வர சேதுபதி	ரூ. 200-0-0

மேற்கண்ட விவரங்களை சட்டமன்றத்தில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் நிதியமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இரயில் எஞ்சின் டிரைவர்களுக்கு வேலை உயர்வு!

இரயில்வே எஞ்சின்களை இயக்கும் ஊழியர்களின் தரத்தை மாற்றியமைக்கவும், வேலை உயர்வுக்கு வாய்ப்பளிக்கவும் முடிவுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதனுல் எஞ்சினை இயக்கும் ஊழியர்களில் 30,000 பேரும், எஞ்சின் துப்புரவாளர்களில் 30,000 பேரும் பலனடைவராம்.

டி. டி. கே. ஈடுபட்ட ஆராய்ச்சி!

புதுடில்லி, ஜூலை 18—

கேரளத்தில் பொதுவுடைமையர் ஆட்சிபீடம் ஏறியது எவ்வாறு?—என்ற ஆராய்ச்சியில் மத்திய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஈடுபட்டு, காரணமும் கண்டுபிடித்துவிட்டார்!

'காரணவான்கள்' (இல்லறத் தலைவர்கள்) எல்லா சொத்துக்களையும் தங்கள் கையிலேயே வைத்திருப்பதால், 'அனந்தரவான்கள்' (தலைவரின் இளையவர்கள்) பொதுவுடைமையர்களாகி விடுகின்றனர் என்று கூறினுராம், மக்கள் சபையில்!

இரண்டாவது இடம் பெறும் இந்திய நகரம்!

ஐதராபாத், ஜூலை 18—

இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஐதராபாத், செகந்தராபாத் ஆகிய இரு நகரங்களில்தான் அதிகமான 'சைக்கிள்'கள் நடமாடுகின்றனவாம்!

ஐதராபாத் நகரில் 1,28,000-க்கும் அதிகமாகவும், செகந்தராபாத் நகரில் 28,000-க்கும் அதிகமாகவும் 'சைக்கிள்'கள் உள்ளனவாம்!

உலகத்திலேயே அதிக 'சைக்கிள்'கள் உள்ள நகரங்களில் முதல் இடம் பெறுவது ஆம்ஸ்டர்டாம் என்ற நகரம்தானும்! இரண்டாவது இடத்தைப் பெறுவது ஐதராபாத் நகர்தானும்!

ஐதராபாத் நகரில் இவ்வளவு அதிக 'சைக்கிள்'கள் இருப்பதுவுமன்றி 10,000 'சைக்கிள் ரிக்‌ஷா'க்களும் உள்ளனவாம்; இதுகூட உயர்ந்த ஓர் எண்ணியே!

கேரள காங்கிரஸ் தலைவர் இராஜினுமா

கோழிக்கோடு, ஜூலை 17—

கேரளப் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் கே. மாதவமேனன் தனது பதவியிலிருந்து விலகிக் கொண்டிருக்கிருர்.

உடல்நலக் குறைவின் காரணமாகவே பதவியிலிருந்து ஓய்வு பெறுவதாக அவர் கூறியிருக்கிருர்.

டெல்லியின் புதிய வரி விதிப்புகள்

பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முறையீடு

பல ஊர்களில் தி. மு. க. கண்டன முழக்கம்

கடந்த சூலை 7-ந்தேதியன்று டெல்லியின் புதிய வரிவிதிப்புகளைக் கண்டித்து, பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முறையிடும் நாள் தமிழகத்தின் பல ஊர்களிலும் நமது கழகத்தவரால் கொண்டாடப்பட்டன; அந்த நிகழ்ச்சிகளின் சாரம் கீழே தரப்படுகிறது:—

கடலூர் :

7—7—57 மாலை 5 மணிக்கு கடலூர் ஒ. டி. தி. மு. கழக பணிமனையிலிருந்து தோழர் கே. எம். வேலு எம். சி. அவர்கள் தலைமையில், தோழர் கி. தண்டபாணி அவர்கள் அணிவகுப்புடன் கழகக் கொடிகள், வரி எதிர்ப்புத் தட்டிகள் ஏந்தி ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு மழையையும் பொருட்படுத்தாது வசந்தராயன் பாளையம், கொடிக்கால் குப்பம், முருகேசம்பேட்டை, வண்டி பாளையம், திருப்பாபுலியூர் வழியாக புதுப்பாளையம் சித்தாராம் நகரிலுள்ள மக்கள் சபை உறுப்பினர் திரு. டி. டி. முத்து குமாரசாமி நாயுடு அவர்கள் இல்லத்திற்கு இரவு 8 மணிக்கு வந்தடைந்தது.

நகர கழகச் செயலாளர் கி. கோவிந்தராசன் வரி முறையீடு விண்ணப்பத்தை, மக்கள் சபை உறுப்பினருக்காக அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜெண்டு திரு. பாலகுரு அவர்களிடம் கொடுத்தார். விண்ணப்பத்தைப் பெற்று, மக்கள் சபை உறுப்பினரிடம் கொடுத்து ஆவன செய்வதாக உறுதி கூறிய பிறகு, அங்கேயே தோழர் இளம்வழுதி தலைமையில் கூட்டம் நடந்தது;

தோழர் இளம்வழுதி அவர்கள் வரி கொடுமையைப் பற்றி பேசினார்; தோழர் கே. எம். வேலு ஊர்வலத்தில் கடமையுணர்ச்சியுடன் கலந்துகொண்ட தோழர்களைப் பாராட்டினார். தோழர் கி. கோவிந்தராசன் வரி முறையீடு தீர்மானத்தைப் படித்தார்—தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

★

திருமங்கலம் :

7—7—57 மாலை 6½ மணிக்கு இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில், பகுத்தறிவு இளைஞர் படிப்பகத்திலிருந்து தோழர் க. ம. வ. நடராசன் தலைமையில் மாபெரும் ஊர்வலமொன்று புதிய வரிகளை திரும்பப் பெறும்படியும், இயக்க இலட்சியத்தையும் ஒலி முழக்கம் செய்துகொண்டு, நகர முக்கிய வீதிகளின் வழியாக பாராளுமன்ற உறுப்பினர் தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் இல்லம் சென்றது; இந்நிகழ்ச்சியை முன் கூட்டியே தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிவித்திருந்தும், அவர் அன்று ஊரில் இல்லை. எனவே அவரது துணைவியாரிடம், ஊர்வலத் தலைவர் ஊர்வலத்தின் நோக்கத்தை கூறியபின், தோழர் இரசாக் முறையீட்டு நகலை அவரிடம் கொடுத்தார். ஊர்வலம் மீண்டும் படிப்பகம் வந்தடைந்து முடிவுற்றது.

பின்னர் படிப்பகத்தின் முன்பாக தோழர் தங்கையா தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; ஆண்களும் பெண்களும் ஏராளமாகக் கலந்து கொண்ட அக்கூட்டத்தில் தோழர்கள் க. ம. வ. நடராசன், சி. இராசேந்திரன், கருப்பண்ணன், பிச்சை ஆகியோர் புதிய வரிக் கொடுமைகளை விளக்கிப் பேசியபின், ஊர்வலத்தையும், கூட்டத்தையும் மிகச் சிறப்பாக நடத்தித்தந்த எல்லா தோழர்களுக்கும் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவடைந்தது.

★

கோபி :

7—7—57 மாலை 4 மணிக்கு, கோபி நகர தி. மு. க. அலுவலகத்திலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, கோபி வழிப் போக்கர் விடுதியில் தங்கியிருந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. எஸ். இராமசாமி (காங்கிரஸ்) அவர்களைச் சந்தித்து முறையீட்டு நகலைக் கொடுத்துவிட்டு, புதிய வரிகளால் பொது மக்கள் படும் அவதியை நல்ல முறையில் விலக்கிச் சொல்லப்பட்டது.

இறுதியில் திரு. கே. எஸ். இராமசாமி அவர்கள், முறையீட்டில் உள்ள குறைகளைப் போக்க ஆவன செய்வதாக உறுதி கூறி, ஊர்வலத்தில் வந்திருந்த அனைவருக்கும் தேநீர் வழங்கி வழியனுப்பிவைத்தார்.

ஊர்வலம் மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு மாலை 5-45 மணி அளவில் கழகக் கட்டிடத்தை வந்தடைந்தது. தோழர் என். இராசு, க. அன்பரசு, ஆகியோரும், கழகத் தோழர்களும், ஏராளமான பொதுமக்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பாராளுமன்ற உறுப்பினர் கோபிக்கே வந்து முறையீட்டு நகலை பெற்றுக் கொண்டபடியால், அன்று தோழர் எம். ஏ. ஆறுமுகம் தலைமையில், கூகலூரில் நடைபெற இருந்த பொதுக்கூட்டம் நிறுத்தப்பட்டது.

★

புளியங்குடி :

7—7—57 மாலை 5 மணிக்கு தி. மு. கழகச் சார்பாக நெல்லை மாவட்டச் செயலாளர் திரு. டி. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஊர்வலம் ஒன்று கழக அலுவலகத்திலிருந்து புறப்பட்டு முக்கிய வீதிகளில் சென்று பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். சங்கரபாண்டியன் அவர்கள் இல்லத்திற்குச் சென்று அன்னாரிடம் புதிய வரிவிதிப்பு முறையீட்டின் நகலை சமர்ப்பித்து ஏழை-எளிய நடுத்தர மக்களை மிகவும் பாதிக்கும் இப்புதிய வரிகளைத் திரும்பப்பெற வேண்டும் என்றும், அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் வலியுறுத்திப் பேசும் படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. சங்கரபாண்டியன் அவர்கள் ஆவன செய்வதாக வாக்குறுதி தந்தார்.

அன்று இரவு 8-30 மணிக்கு, நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் புதிய வரி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் பி. ஏ. கங்காதரன், வி. எஸ். இராமசாமி, ஏ. வெள்ளத்துரை, சி. சண்முகம், சி. நடராசன், சேது, ஆ. திராவிடமணி ஆகியோர் புதிய வரியை கண்டித்துப் பேசியபின், ஏழை-எளிய, நடுத்தர மக்களைப் பாதிக்கின்ற இப் புதிய வரிகளைத் திரும்பப்பெறும்படி இந்தியப் பேரரசின் நிதி அமைச்சரைக் கேட்டுக்கொண்டும், அதை வலியுறுத்தி அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் பேசும்படி தென்காசி தொகுதி பாராளுமன்ற உறுப்பினரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், இந்நகரின் தண்ணீர் கஷ்டத்தை நிவர்த்திக்கும்படி பஞ்சாயத்துப் போர்டாரையும், முப்பதாயிரம் மக்கள் தொகையுள்ள இப்பஞ்சாயத்துப் பகுதிக்கு மகப்பேறு விடுதி ஒன்று ஏற்படுத்தித் தரும்படி பஞ்சாயத்து, சமுதாய நலத் திட்டம் மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேட்டூரில்

அலுமினியம் தொழிற்சாலை நிறுவப்படுமா?

மக்கள் சபையில் அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, சூலை 18—

"சேலம் மாவட்டம்—சேர்வராயன் மலையில் கிடைக்கும் 'பாக்சைட்' (அலுமினிய தாதுப் பொருள்) பற்றி பரிசீலனைகளும், மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை துவக்குவது சம்பந்தமாகத் தொழில் நுணுக்க உதவியும், நிதி உதவியும் பெறும் வகையில், வெளிநாட்டு நிறுவனமொன்றின் கூட்டுக்கான பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன" என்று மக்கள் சபையில் தொழிலியல் அமைச்சர் மனுபாய் ஷா தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்த அறிவிப்பு எதிரொலி !

நேரு-நந்தா கூடிப் பேசுகின்றனர்

புதுடில்லி, சூலை 16—

இந்தியாவெங்கணும், டில்லி சர்க்காரின் பலதுறை ஊழியர்களும் ஆகஸ்டு மாதத்திலிருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்திருப்பதை ஒட்டி, பண்டித நேரு, தொழிலாளர் மந்திரி நந்தாவுடன் கூடிப் பேசியிருக்கிறார் என்று தெரிய வருகிறது.

பண்டிதர் இந்தியா திரும்பியதும், இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைப்பது பற்றி முடிவு அறிவிப்பதாக தபால் இலாகா மந்திரி லால்பகதூர் சாஸ்திரி கூறியிருந்தாராம்; அதுபற்றியும் இப்போது யோசிக்கப்பட்டுவருகிறது.

கோதுமை சாகுபடி

ஒரு புள்ளி விவரம்

புதுடில்லி, சூலை 16—

நடப்பு ஆண்டில், மொத்தம் 3,28,91.000 ஏக்கராவில், கோதுமை பயிரிடப்பட்டிருக்கிறதென்றும், மொத்தம் 90,68,000 டன் விளைச்சல் கிடைக்குமென்றும் தெரியவருகிறது,

பார்லி சாகுபடி

நடப்பு ஆண்டில் 85,94,000 ஏக்காராவில் பார்லி பயிரிடப்பட்டிருக்கிறதென்றும், மொத்தம் 27,44,000 டன் விளைச்சல் கிடைக்குமென்றும் தெரியவருகிறது.

பிராங்கோவிற்கு பிறகு என்ன ?

ஸ்பெயின் நாட்டில் மீண்டும் முடியாட்சி ?

மாட்ரிட், சூலை 15—

இப்போது ஸ்பெயின் நாட்டு சர்வாதிகாரியாக இருக்கும் ஜெனரல் பிரான்சிஸ் மகா-பிராங்கோ இறந்து விட்டாலோ, அல்லது பதவியிலிருந்து விலகிக் கொண்டாலோ, ஸ்பெயின் நாட்டில் மீண்டும் முடியாட்சியே நிறுவப்படும் என்று அதிகாரபூர்வமாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஜெனரல் பிராங்கோவின் அலுவலக மந்திரியான பிளாங்கோ என்பார், பாராளுமன்றத்தில் இந்தத் தகவலை அறிவித்து விட்டு 'அமைதிற முடியாட்சி, பாரம்பரியத்திற்கு இணக்கமானதாகவும், ஆட்சிக்கொள்கைகளை விசுவாசத்தோடு அனுசரிக்கக் கூடியதாகவும் இருக்கும்' என்று கூறியிருக்கிறார்.

64 வயதான பிராங்கோ, கடந்த 20 ஆண்டுக்காலமாக ஸ்பெயின் நாட்டு சர்வாதிகாரியாக இருந்து வருகிறார்.

பிராங்கோவிற்குப் பிறகு ஜுவான் கார்லோஸ் என்ற 19 வயது இளவரசர், மன்னராக முடிதரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இளவரசர்தான் முறைப்படி பட்டத்திற்கு உரியவர் என்றும், ஸ்பெயினின் கடைசி மன்னரான பதின்மூன்றும் ஆல்போன்சாவின் பேரன் என்றும், இந்த இளவரசனின் குடும்பம் இப்போது போர்ச்சுகல் நாட்டில் தஞ்சம் புகுந்து வாழ்ந்து வருவதாயும் கூறப்படுகிறது.

இளவரசன் இப்போது இராணுவக் கல்லூரியில் பயின்று வருவதாகவும், சீக்கிரமே கடற்படைப் பயிற்சியும் பெறுவார் என்றும் கூறப்படுகிறது.

மீண்டும் வந்தால்.....!

புதுடில்லி, சூலை 17—

சளிக் காய்ச்சல் (இன்புளுயன்சா) மீண்டும் வந்தால் அதைத் தடுக்க மத்திய அரசினரும், மாநில அரசாங்கங்களும் முடிந்த எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருவதகாவும், மீண்டும்வரக்கூடுமென்பது உறுதியல்லவென்று நிபுணர்கள் கருதுவதாகவும், அது பற்றி அச்சமடைய வேண்டியதில்லை யென்றும் மத்திய அமைச்சர் கர்மார்க்கர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

கேட்டீரா, சேதி!

கி. பி. 2,000 ஆண்டிற்குப் பிறகு மக்கள் இனம், சந்திரனில் வாழ்க்கை நடத்தும்படி செய்வது சாத்தியமாகும் என்று விஞ்ஞான மாநாடொன்றில், அமெரிக்காவைச் சேர்ந்த பிலடெல்பியாவிலுள்ள வான மண்டல கிரகங்களின ஆராய்ச்சி டைரக்டரான டாக்டர் ஐ. எம். லெவிட் என்பார் கூறியுள்ளார்.

சந்திரனில் ஆரம்பமாகும் தனி நாகரிகத்திற்கு முதல் கட்டமாக அங்கு ஒரு காலனியை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும், கி. பி. 2000 ஆண்டில் வானவெளியில் நிறுவப்படும் நிலையங்களிலிருந்து சந்திரனுக்கும், அதற்குச் சமீபத்திலுள்ள கிரகங்களுக்கும் பிரயாணங்கள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் அறிவித்தார்.

பாடப்பிரிவினைத் திட்டம்

59 உயர்நிலைப் பள்ளிகள் அமுலாகக்கூடும்.

சென்னை, சூலை 18—

கல்வுத்துறை இயக்குநர் தெரிவித்துள்ள திட்டத்தின்படி நடைமுறை கல்வி ஆண்டில் பாடப்பிரிவினைத் திட்டத்தை அரசியலார் ஏற்றுக்கொண்டார்கள் என்று தெரியவருகிறது. இதன்படி இரண்டு புதிய பாடத் திட்டங்களை 41 உயர்நிலைப் பள்ளிகளிலும், ஒரு புதிய பாடத் திட்டம் 18 உயர்நிலைப் பள்ளிகளிலும் துவங்கப்படும். இந்த 59 உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே மேற்படி பாடத் திட்டங்களை அமுல் நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவாம்.

இறுதி முடிவு எப்போது?

மக்கள் சபையில் மத்திய அமைச்சர் கர்மார்கர் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், 'கண்பாங்கிகள் ஏற்படுத்துவது பற்றி மாநில அரசுகளின் எண்ணங்களை அறிந்த பிறகுதான் அதுபற்றி சட்டம் இயற்றப்படுவது குறித்து முடிவு செய்யப்படும்; கேரள மாநிலம் உள்ளிட்ட 5 மாநிலங்கள் இன்னும் தங்கள் எண்ணத்தைத் தெரிவிக்கவில்லை' என்று கூறியுள்ளார்.

ஏழை மாணவர்களுக்கு

முத்தமிழ் நாடக மன்ற உதவி

செங்கோட்டை, சூலை 15—

விசுவநாதபுரம் முத்தமிழ் நாடக மன்றத்தாரால் இங்கு நடத்தப்பட்ட 'துன்பத்தின் எல்லை' என்ற சமுதாய நாடகத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தொகையில் ரூ 75-க்கு பாட நூல்கள், குறிப்பு நூல்கள், கற்பலகை முதலியன வாங்கி, இவ்வூர் எம். எம். உயர்தர ஆரம்பப் பள்ளி, கே. வி. எம். பிச்சையா வித்தியாசாலை, இந்து துவக்கப் பள்ளி ஆகிய இம்மூன்று பள்ளிகளில் கல்வி பயிலும் ஏழை மாணவர்களுக்கு, சூலை 3-ம் நாள் வழங்கப்பட்டது. (ந. கி.)

எதிர்க் கட்சிகளை ஒழிப்பதற்குக் குண்டர்கள்

காங்கிரஸ் சர்க்கார்களின் போக்கு குறித்து பி. சோ. கட்சி கண்டனம்

காங்கிரஸ் சர்க்கார்கள் பல மாநிலங்களில், சனநாயக வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில், எதிர்க் கட்சிகளை அழித்து ஒழிப்பதற்கு குண்டர்களை ஏவிவிடுவதாக பி. சோ. கட்சியின் தேசீய நிர்வாகக் குழு கண்டனம் தெரிவித்திருக்கிறது.

அரசியல் எதிர்ப்பை ஒழிப்பதற்காக — பயங்காப்படுத்துவதற்காக பஞ்சாபில் ஆளும் கட்சியினர், சமூக விரோத சக்திகளை ஏவிவிடுவதாக கட்சியின் கவனத்திற்கு வந்துள்ளது என்றும், இது மிகக் கவலையளிப்பதாயுள்ளது என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"காங்கிரஸ் இதுபோல, எதிர்க் கட்சிகளை எதேச்சாதிகாரமான முறையில் குண்டர்களை ஏவி அழிக்க நினைப்பது சனநாயகத்திற்கே பெருங்கேடான விஷயமாகும்; இந்தப் போக்கினை எதிர்த்து முறியடிப்பதற்கு மக்கள் துணைபுரிய வேண்டும்," என்றும் பி. சோ. கட்சி கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

வேடிக்கையுமல்ல---வேதனையுமல்ல !

சங்லி, சூலை 18—

தென் பகுதி இரயில்வேயின் ஹப்ளி பகுதியில் 'போர்ட்டர்' பணிக்கு 100 பேர் தேவை என்று விளம்பரம் செய்யப்பட்டதாம்; அதற்கு 4,000 பேர் மனு செய்து கொண்டனராம்; இதில் குறிப்பிடத்தகுந்த ஓர் வேதனை, பி.ஏ. படிப்பில் தேருமல் தவறியவர்களும், 'மெட்ரிகுலேஷன்' படிப்பில் தேறியவர்களும் மனுச் செய்துகொண்டனராம்.

மனு போட்டவர்களில் 800 பேர் தகுதியறிவதற்கான 'பேட்டி'க்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

நன்றி அறிவிப்பு

"23—6—57-ல், தூத்துக்குடியில் நடைபெற்ற நெல்லை மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் என்னை மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுத்த மாவட்டக் கழக உறுப்பினர்களுக்கும், வாழ்த்துக்கள் அனுப்பிய கிளைக் கழகங்களுக்கும் நண்பர்களுக்கும், தனித்தனியே எழுத முடியாததால் இதன் மூலம் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மாவட்டக் கழக உறுப்பினர்களும், கிளைக் கழகங்களும் உடனுக்குடன் என்னோடு ஒத்துழைத்து நெல்லை மாவட்டத்தைச் சீரும் சிறப்புடன் விளங்க ஆவனசெய்ய வேண்டுகிறேன்" என, நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

ஆசிரியர்களுக்கு பஞ்சப்படி?

கழக உறுப்பினர்கள் கேள்வி

சென்னை, ஜுலை 17—

சட்டசபையில் இன்று கேள்வி நேரத்தின்போது, ஆசிரியர்களின் ஊதிய உயர்வு பற்றியும், பஞ்சப்படி பற்றியும் கழக உறுப்பினர்கள் பல கேள்விகள் எழுப்பினர்.

தோழர் அன்பழகன்:—"பஞ்சப்படி என்பது கால நிலையையும், வாழ்க்கைத்தர நிலைமையைக் கொண்டும் தரப்படுவதென்பதால், எல்லாத் துறையிலும், எல்லோருக்கும் பொதுவாக பஞ்சப்படி தரப்படுமா?"

அமைச்சர்:—"பஞ்சப்படியை ஊதியத்துடன் சேர்த்துத் தருவதற்கான நிலைமையை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது."

தோழர் எம். பி. சாரதி:—"திருப்பதி பள்ளியில் ஆசிரியர்களுக்கு ஏன் பஞ்சப்படி தரப்படவில்லை என்பதை அரசாங்கம் விளக்குமா?"

அமைச்சர்:—"அந்தப் பள்ளி தனியாக நடைபெறுவதாகும்."

தோழர் ஏ. கோவிந்தசாமி:—"ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ள ரூ. 7 ஊதிய உயர்வும், ரூ. 5 பஞ்சப்படியும் ஆக ரூ. 12 உயர்வையும் ஆசிரியர்களின் ஊதியத்துடன் சேர்த்து தர அரசாங்கம் முன்வருமா?"

அமைச்சர்:—"அரசாங்கம் இதுபற்றி ஆராய்ந்து வருகிறது."

வானொலி உபயோகத்தை கட்டுப்படுத்துவதேன்?

எம். பி. சுப்பிரமணியம் கேள்வி: அமைச்சர் பதில்

சென்னை, ஜுலை 17—

"சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள், ஒரே நிலையத்தில் ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிகளை மட்டுமே கேட்கும் வசதியைப் பெறுமாறு கட்டுப்படுத்துவதேன்?" என்று கழக உறுப்பினர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சட்டசபையில் ஒரு கேள்வி எழுப்பினார்.

அமைச்சர்:— "இந்திய வானொலி ஒலிபரப்புகளில், ஏதேனும் 3 நிலையங்களின், நிகழ்ச்சிகளை மட்டும் கேட்பதற்கு வசதி செய்துத் தரப்படுகிறது; எல்லா நிகழ்ச்சிகளையும் மக்கள் அவசியம் கேட்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு மாதம் பூராவும் ஒரு நிலையத்தின் நிகழ்ச்சிகளை மட்டுமே கேட்பதற்குக் கட்டுப்படுத்தப்படுகிறது"

கால் நடைகளுக்குத் தீங்கிழைக்கும் குற்றங்கள்

சென்னை, ஜுலை 17—

கால்நடைகளுக்குத் தீங்கிழைப்பதைத் தடுக்கும் சட்டத்தின்கீழ் 1955—56-ம் ஆண்டில் மொத்தம் 1,613 பேர் தண்டிக்கப்பட்டனர் என்று சட்டசபையில் அமைச்சர் தெரிவித்தார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி:—"வாகனங்களுக்கு 'லைசென்ஸ்' வழங்கப்படும்போது எஸ். பி. சி. ஏ.—வினர் மிருகங்களைப் பரிசீலிக்கின்றனரா?"

அமைச்சர்:—'அது வேறு விஷயம்.'

உடல்நல விடுதிக்கு உதவி

சென்னை, ஜுலை 18—

திருச்சியிலுள்ள இராஜாஜி உடல்நல விடுதிக்கு 1957 சனவரி மாதம் ரூ. 17,400 மானியமாக சென்னை அரசாங்கம் தந்துள்ளது என்று சட்டசபையில் அமைச்சர் மாணிக்கவேலர் தெரிவித்தார்.

சென்னை நகரில் இதுவரை விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவு மேலும் இரண்டு வாரங்களுக்கு—ஜுலை 18-ந் தேதி முதல் 31-ந் தேதிவரையிலும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

விநாயகம் துடுக்குத்தனம்

பெண்களை அவமதித்ததற்கு எஸ். எம். அண்ணாமலை எதிர்ப்பு

வாபஸ் வாங்கச் செய்தார் சட்டசபைத் தலைவர்

சென்னை, ஜுலை 18—

வட ஆற்காடு மாவட்டத்தின் ஐந்து அதிசயங்கள் என்று கூறி வாய்த்துடுக்காகப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் கே. விநாயகம். இன்று சட்டசபையில், தான் பெண்களை அவமதிக்கும் வகையிற் கூறியவற்றை வாபஸ் பெற்றுக்கொண்டார்,

"தண்ணீர் இல்லாத ஆறு; வீரர்கள் இல்லாத கோட்டை; கடவுளர்கள் இல்லாத கோவில்; அதிகாரம் இல்லாத போலீஸ்; அழகில்லாத பெண்கள்,"

இவைதான், வடஆற்காடு மாவட்டத்தின் ஐந்து அதிசயங்கள் என்று அவர் கூறினார்!

உடனே கழகத் தோழர் எஸ். எம். அண்ணாமலை எழுந்து, ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.

குறிப்பாக, 'பெண்களைப் பற்றி தோழர் விநாயகம் கூறியதைத் திருபப்பெற வேண்டும்; அது பெண்களை அவமதிப்பதாகும்' என்று அவர் கூறினார்

"சொந்த அனுபவத்தில்தான் சொல்லுகிறேன; நான் 'வூர் ஹீஸ்' கல்லூரி மாணவனாயிருந்திருக்கிறேன். அப்பட்டமான உண்மையைத்தான் நான் கூறினேன்; எவரையும் அவமதிப்பது என் நோக்கமல்ல" என்று விநாயகம் கூறியிருக்கிறார்.

"பெண்களைப் பற்றி எதும் குறிப்பிடாமலிருந்தால், நான் ஆட்சேபித்திருக்க மாட்டேன்; எனவே, பெண்களைப் பற்றிக் குறிப்பிட்டதைத் திரும்பப் பெறுக"

என்று, சபைத் தலைவர் டாக்டர் கிருஷ்ணாராவ் கூறினார்.

என்றாலும், விநாயகம் எழுந்து, 'நான் எவரையும் அவமதிக்க நினைக்கவில்லை; உண்மையைத்தான் சொன்னேன்' என்று குதர்க்கம் பேசினார்; என்றாலும் பின்னர், 'சபைத் தலைவர் வேண்டுவதாலும், அந்த மாவட்ட உறுப்பினர்கள் எதிர்ப்பதாலும், பெண்களைப் பற்றிக் கூறியதை வாபஸ் பெறுகிறேன்' என்று கூறியிருக்கிறார்!

10,15,878 கைத்தறி பதிவாயிற்றும்!

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஜுலை 19—

இந்தியாவில் 1957 ஜுன் கடைசிவரையில் மொத்தம் 10,15,878 கைத்தறிகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்றும், பதிவு செய்யும் வேலை இன்னும் பூர்த்தியடையவில்லையாகையால் இதை இறுதியான எண்ணிக்கையாகக் கூறிவிட முடியாதென்றும், மத்திய வர்த்தக மந்திரி மக்கள்சபையில் கூறினார்.

கூட்டுறவு சங்கங்களின் கீழ் இயங்கிவரும் தறிகள், சம்பந்தமான தகவல்கள், பதிவு செய்யும் உத்தரவின்படி சேகரிக்கப்படவில்லையாம்!

பாலாற்றில் அணைகட்ட எல்லைத் தகராறு தடையாக உள்ளதா?

சென்னை, ஜுலை 17—

வாணியம்பாடி அருகில் பாலாற்றுப்பகுதியில் ரூ 56 இலட்சம் செலவில் அணை கட்டி சுமார் 3,500 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி ஏற்படுத்தத் திட்டம் உருவாக்கப்பட்டதாம்; இதுபற்றி பரிசீலனை செய்த பின்னர், இது சாத்தியமில்லை என்று கருதி திட்டம் கைவிடப்பட்டதாம்; சென்னைக்கும், ஆந்திராவுக்கும் உள்ள எல்லைத் தகராறு தீர்ந்த பின்னரே மீண்டும் ஆராயப்படுமாம்!

ஆந்திராவுடன் சேர்க்கப்பட்டுள்ள சித்தூர் அருகில்தான் அணைக்கட்ட முதலில் யோசிக்கப்பட்டதாம்.

கேள்வி நேரத்தின்போது சட்டசபையில் தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் இதை வெளியிட்டார்.

ஆலைகள் மூடப்பட்டதால் ஏற்பட்ட விளைவு

தொழிலாளர்களின் அவல நிலை?

புதுடில்லி, ஜுலை 19—

1957-ம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் துணி ஆலைகள் மூடப்பட்டதால் மொத்தம் 6,812 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர் என்றும், ஆலைகள் மூடப்படும் என்று 'நோட்டீஸ்' கொடுக்கப்பட்டுள்ளதன் காரணமாய் 8,350 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் மக்கள் சபையில் வர்த்தக அமைச்சர் தகவல் தந்துள்ளார்.

சென்னை—15-வது வட்ட திரு. வி. க. நகர் மக்கள் பொதுநல மன்றத் துவக்க விழா

20—7—57 மாலை 6 மணிக்கு மேற்படி மன்றத் துவக்க விழா ஆறுமுகம் தெருவில் ('செலக்ட்' திரையரங்கின் அருகில்) தோழர் அ. ஆனந்தன் தலைமையில் நடைபெறும்; பேராசிரியர் க. அன்பழகன் எம்.ஏ., எம்.எல்.ஏ. அவர்கள் மன்றத்தை திறந்துவைப்பார்; தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., தோழர்கள் ஏ. கே. வில்வம், பி. எம். கருணாகரன் (தெலுங்கில்) ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

சென்னை-திருவொற்றியூர் தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு

21—7—57 பிற்பகல் 2 மணிக்கு கழகப் பணிமனையில் மேற்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

21—7—57 மாலை 6 மணிக்கு, நெல்லை நகர் 13-வது வட்ட திராவிட முற்போக்கு மன்றத்தில் தோழர் வ. நாகூர் தலைமையில் 'சனநாயகம்' எனும் பொருள் பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

21—7—57 இரவு 7 மணிக்கு சென்னை—புதுவண்ணை வள்ளுவர் இளைஞர் மன்றத்தில் தோழர் எ. வேணு தலைமையில், 'இன்றைய அரசியல் நிலை' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

என். எஸ். இளங்கோ

சுற்றுப்பயணம்

ஜுலை

20: கிழுமாத்தூர்

21: சேலம்

22: மேட்டூர்

24: பாப்பாநாய்க்கன்பாளையம்

26: பர்கூர்

27 – 28: தர்மபுரி பகுதி

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

ஜுலை

20: கோட்டைநத்தம்பட்டி

21: சிங்கம்புணரி

22: திருநெல்வேலி

23: நாங்குநேரி

ஸ்ரீ லலித கலா மன்றம் (Regd) சென்னை-1.

21—7—57 ஞாயிறு மாலை 6-15 மணிக்கு

இராஜா அண்ணாமலை மன்றத்தில்

★

அண்ணா அவர்கள் தலைமையில்

இண்டியன் நேஷனல் ஆர்டிஸ்ட்ஸ் அளிக்கும்

'எங்கிருந்தோ வந்தாள்'

(தமிழ் நாடகம்)

கட்டணம்: ரிசர்வ் ரூ. 5, 3. அன் ரிசர்வ் ரூ. 2, 1.

சென்னை 40-வதுவட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்களுக்கு

"21—7—56 ஞாயிறு காலை 10 மணியளவில், சென்னை—சேப்பாக்கம், தாகூடின்கான் தெருவிலுள்ள 8-ம் எண்ணுள்ள தமிழ் வளர்ச்சி மன்றத்தில், 40-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அதுபோது, மேற்படி வட்டக் கிளைக்கு புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்படும். உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்" என்று சென்னை மாவட்ட தி. மு. கழக துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் அவர்கள் அறிவிக்கிறார்.

சென்னை மாணவர் மன்றம் வெள்ளி விழா

20—7—57 சனியன்று காலை 8-30 மணிக்கு, சென்னை மாணவர் மன்ற வெள்ளி விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள், மன்ற நிலயத்திலிருந்து தலைவர் ஊர்வலத்தோடு துவங்கும்; முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு நாவலர் டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் தலைமையேற்பார்.

திருவாளர்கள் கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் விழாவை துவக்கி வைத்தும், பேராசிரியர் மயிலை—சிவமுத்து தமிழ்க் கொடியேற்றியும் மேயர் டி. என். சீனிவாசன் கண்காட்சியை திறந்து வைத்தும், அமைச்சர் தோழியர் லூர்து அம்மையார் பரிசுகள் வழங்கியும் பேருரை நிகழ்த்துவர்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமி (பிள்ளை) அவர்கள் இராசா அண்ணாமலை செட்டியார் படத்தைத் திறந்துவைத்தும், நாவலர் எஸ். சோமசுந்தரபாரதியார், பாரதியாரின் படத்தைத் திறந்துவைத்தும் சிறப்புரையாற்றுவர். திரு எம். கே. சுந்தரம் அவர்கள் காலையில் வரவேற்புரையும், திரு டி. புருசோத்தம் எம்.எல்.சி. அவர்கள் மாலையில் வரவேற்புரையும், மன்ற அமைச்சர்கள் ஆண்டறிக்கை வெளியீட்டு உரையும், வல்லை-பால சுப்பிரமணியம் நன்றியுரையும் ஆற்றுவர்; இரவு 7-மணிக்கு டி. பி. சகோதரிகளின் நடன நிகழ்ச்சியும் நடைபெறும்.

திருப்பூர்—அறிவுக்கலை மன்ற 2-வது ஆண்டு விழா

21—7—57 காலை 10 மணிக்கு மேற்படி மன்ற 2-வது ஆண்டு விழா, தோழர் முத்துரத்தினம் தலைமையில் திருப்பூர்—20/8 கோர்ட் வீதி, மன்றக் கட்டிடத்தில் நடைபெறும்; தோழர்கள் இளங்கோ, இளம்வழுதி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோர் சிறப்புத் தலைப்புகளில் பேசுவர். பகல் 12 மணிக்கு ஏழைகளுக்குக் கஞ்சி வழங்குதலும், இரவு 7 மணிக்கு தோழர்கள் பி. ஜி. தீனதயாளன்—எம். ஆர். பாலு குழுவினரின் இன்னிசையும் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

திருச்சி 14-வதுவட்டம்:

வன்னி மரத்தடி

(டவுன் ஸ்டேஷன் அருகில்)

21—7—57 மாலை 6½ மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்:

கே. எ. குஞ்சிதபாதம்

பேசுவோர்:

ஏ.வி.பி ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.

ஏ. பி. தர்மலிங்கம்

எம். எஸ். மணி

எஸ். நெடுமாறன்

★

சிவகாசி:

சிவன் கோயில் முன்பு

21—7—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: வே. சாமி

பேசுவோர்:

கே. ஆர். பி. மணிமொழியன்

ஆ. திராவிடமணி

★

வேம்படி தாளம்:

(சேலம் மாவட்டம்)

21—7—57 மாலை 6½ மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

பேசுவோர்:

டி. கே. சீனிவாசன்

ப. கண்ணன்

சிற்றுளி-சுப்பிரமணியம்

★

அறந்தாங்கி வட்டம்—சிட்டங்காடு:

அண்ணா திடலில்

21—7—57 மாலை 5 மணிக்கு

தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்:

ஏ. எஸ். அம்மையப்பன்

பேசுவோர்:

நா. மாரிமுத்து

முக. மீரா

இராம. அசோகன்

கு. அடைக்கலம்

மு. சீனிவாசன்

அரு. குமாரசாமி

★

நாச்சியார்கோவில்:

கீழவீதி

21—7—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஆர். பி. ரங்கன்

பேசுவோர்:

இளமுருகு

தோழியர் பொற்செல்வி

ஜம்பு

இறைஒளி

★

குடந்தை:

சௌராஷ்டிர புதுத் தெருவில்

20—7—57 அன்று மாலை

தலைவர்: கே. கே. நீலமேகம்

பேசுவோர்.

டி. கே. சீனிவாசன்

சு. பத்மநாபன்

எஸ். ஆர். இராதா

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம்.ஏ.